மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, இட வசதி காரணமாக குறைந்த அளவு எண்ணிக்கையுள்ள படுக்கைகள் தான்—6 அல்லது 8 படுக்கைகள் தான்—ஒதுக்கப்பட்டுள்ளன.

Provision of Water Supply in the Government Hospital at Panchapatti in Tiruchirappalli District

*19 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Health be pleased to state:

(a) whether it is a fact that there is no provision for water supply in the Government Hospital at Panchapatti in Tiruchirappalli District; and

(b) if so, the action proposed to be taken by the Government in the matter?

திருச்சிராப்பள்ளி மாவட்டம், பஞ்சப்பட்டியிலுள்ள அரசு மருத்துவ மனைக்குக் குடிநீர் வசதி

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், பஞ்சப்பட்டியிலுள்ள அரசு மருத்துவ மனைக்குக் குடிநீர் வசதி செய்யப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆமெனில், இது குறித்து அரசு மேற்கொள்ளக் கருதியுள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) பஞ்சப்பட்டியில் உள்ள அரசு மருத்துவமனையில் நீர் வழங்குவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(இ) இவ்வினுவிற்கு இடமில்லை.

THIRU G. SWAMINATHAN: Sir, when was this hospital opened? For how long was there no facility for water in this hospital?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, தண்ணீர் ஏற்பாடே செய்யப்படவில்லை என்ற பிரச்சினை எழவில்லை. அங்கேயுள்ள சமுதாயக் கிணற்றிலிருந்து மருத்துவ மனையினுடைய தொட்டிக்குத் தண்ணீர் அனுப்ப வேண்டுமென்ற முறை இருந்தது. ஆனல் சமுதாயக் கிணறு கோடை காலத்தில் வற்றிவிடும் நிலைமை காரணமாக மருத்துவ மனைத் தொட்டிக்கு தண்ணீர் கிடைக்கவில்லை என்ற நிலைமை ஏற்பட்டது. அது குறித்து பொதுப் பணித் துறைப் பொறியாளர் பரிசிலனை செய்து, தண்ணீர் கிடைப்பதற்கு கிணற்றை

1974 சனவரி 21]

ஆழப்படுத்தும் பொறுப்பு அவரிடம் இப்போது விடப்பட்டுள்ளது. இடைக் காலத்தில், இரவு நேரங்களில் மருத்துவ மனைத் தொட்டி நிரப்பப்படும் நிலை மைகள் மேற்கொள்ளப்பட்டன.

THIRU G. SWAMINATHAN: When this hospital has been constructed at a cost of some lakhs of rupees, may I konw the reason why there was no planning for digging a well or for providing enough water facilities for this hospital ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, அந்த மருத்துவ மனை எத்தனை லட்சத்தில் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டது என்பதே தெரியாத நான், இதற்கு எப்படி பதில் சொல்வதென்று தெரியவில்லை.

THIRU G. SWAMINATHAN: Sir, the hospital was built at a cost of Rs. 1,50,000. When the construction of the hospital was planned for, why was there no provision for water? Why was the plan faulty in that respect?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அந்த விளக்கத்தோடு ஒரு கேள்வி வருமானால், அதற்கான தனி விடை கிடைக்கும்.

Financial Assistance for the Thiruvalluvar Gurukulam Patasalai, Madras

* 20 *Q.*—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether any representation requesting financial assistance from the Government has been received from the Management of the Thiruvalluvar Gurukulam Patasalai, where the children of Narikuravars are studying; and

(*b*) if so, the action taken thereon by the Government ?

சென்னை திருவள்ளுவர் குருகுல பாடசாலை நிதியுதவி

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னையில் நரிக்குறவர்களின் பிள்ளைகள் படிக்கும் திருவள்ளுவர் குருகுல பாடசாலை நிர்வாகியிடமிருந்து அரசுக்கு உதவி கோரி விண்ணப்பம் வந்ததா?

(இ) ஆமெனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?